# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1674/4 - 2010 ඔක්තෝබර් 05 වැනි අඟහරුවාදා - 2010.10.05

*1674/4 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 6/2001*

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 78 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின்கீழ் இலங்கை காப்புறுதிச் சபையால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கை காப்புறுதிச் சபை.

இலங்கை காப்புறுதிச் சபை,
கொழும்பு 2.
2010, செத்தெம்பர் 28.

**விதிகள்**

காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் செத்தெம்பர் 23 ஆந் தேதிய 1255/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்படும் காப்புறுதி முகவர் தகைமை விதிகள் 2002, அதன் 2 ஆம் விதியில் மேலும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அத்தகைய விதியின் இ என்னும் பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(இ) ஆகக்குறைந்தது பின்வரும் தகைமைகளையாவது பெற்றுள்ளார் அல்லது கொண்டிருப்பவர் :-

(i) ஒன்றில் கணிதம் அல்லது எண்கணிதத்தில் அத்துடன் முறையே சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் ஆகக்குறைந்தபட்சம் சாதாரண சித்திகளை உள்ளடக்கவேண்டிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர் ; அல்லது

(ii) மேலே (i) இல் குறித்துரைக்கப்பட்டதற்கு சமமான மட்டத்தில் அல்லது அதைவிட உயர்ந்த மட்டத்தில் வேறு ஏதேனும் இயைபான கற்கை நெறியில் தகைமை பெற்றவர்; ஆயினும் சபையின் அங்கீகாரம் ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையிலும் பெறப்படுதல் வேண்டும் ; அல்லது

(iii) காப்புறுதி முகவராக எந்தத் தேதியில் காப்புறுதி முகவர் தகைமை விதிகள், 2002 நடைமுறைக்கு வந்ததோ அந்தத் தேதியில் உள்ளவாறான காப்புறுதி முகவர் ஒருவராக ஐந்து (5) வருடத்திற்கு குறையாத அனுபவத்தைக் கொண்டுள்ளவர் ; " ; அத்துடன்



149389

(2) அத்தகைய விதியின் (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(ஊ) காப்புறுதிக் கம்பனி ஒன்றினால் அல்லது தரகர் ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்டவர் ;

(எ) பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர் ஒருவரின் அல்லது தரகரின் சம்பளமளிக்கப்படாத ஊழியர் ஒருவர் ; மற்றும்

(ஏ) காப்புறுதி தரகர் என்ற ஸ்தானத்தில் நிதியைக் கையாடுதல் அல்லது மோசடி செய்தல் என்னும் ஏதுக்களின் மீது முன்பு சேவை முடிவுறுத்தப்படாதிருக்கின்ற தனியாள் ஒருவர்,".

10-669

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.